<u>முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.</u>

எம்.சி.ஓ.பி. எண். 29/2024

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | பன்னீர்செல்வம் |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | |
| வயது | .. | |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | |
| வட்டம் | .. | |

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19ஆம் நாள் வெள்ளிக்கிழமை திரு. நா. சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் கேள்விபட்டு தான் சம்பவ இடத்திற்கு சென்றேன். விபத்து தொடர்பாக எனது சித்தப்பா ஞானமுத்து தான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அவரும் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். என் அப்பா சைக்கிளில் செல்லும்போது எதிர்திசையில் வந்த ஹோண்டா கார் மோதிவிட்டது. என் அப்பாவிற்கு அடிப்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு 68 வயது இருக்கும். கார் ஓட்டுநர் மீது எந்த தவறும் இல்லை என்றும், என் தகப்பனார் வயது முதிர்வின் காரணமாக சைக்கிளை ஒட்டத்தெரியாமல் ஓட்டி கார் மீது மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா கூலிவேலை செய்து வந்தார். அதேபோல என் அப்பா மாதம் ரூ.20,000/- சம்பாதித்து வந்ததற்கு எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக என் அப்பாவின் வருமானத்தை அதிகமாக

சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நாங்கள் கேட்டிருக்ககூடிய இழப்பீட்டு தொகை அதிகம் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா மீது தவறு என்பதால் 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.